**<u>சுருக்கம்</u>**

கூட்டுறவுத் துறை – 2014–2015–ம் ஆண்டிற்கான மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – 30 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் வாடிக்கையாளர் பயன்பாட்டிற்காக பாதுகாப்பு பெட்டகங்கள் அமைத்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஎன்1) துறை**

**<u>அரசாணை ( நிலை) எண். 98</u>** **<u>நாள்: 23.09.2014</u>**

ஜய வருடம்
புரட்டாசி மாதம் 7ம் நாள்.
திருவள்ளுவர் ஆண்டு 2045
படிக்க :

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கடிதம் எண்.69156/2014/ வேஊவ 1
நாள். 25.08.2014

----

**<u>ஆணை</u>**

2014–2015–ம் ஆண்டிற்கான கூட்டுறவுத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள் : –

“கிராமங்களில் உள்ள மக்களும் தங்களுடைய நகைகள், முக்கிய ஆவணங்கள் ஆகியவற்றைப் பாதுகாப்புடன் வைக்க 30 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் ரூ.88 இலட்சம் செலவில் பாதுகாப்பு பெட்டகங்கள் அமைக்கப்படும்’’.

2. இவ்வறிவிப்பு தொடர்பாக, மேலே படிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கடிதத்தில், தமிழ்நாட்டில் 4,530 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அச்சங்கங்கள் விவசாயிகளுக்கு தேவையான பயிர்க்கடன், மத்திய காலக்கடன் போன்றவற்றையும் பொதுமக்களுக்கு தேவையான நகைக்கடன் இதரவகை இனங்களை அளித்தும் உறுப்பினர்களிடமிருந்து வைப்புகள் பெற்றும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன என்றும், நாமக்கல் மண்டலம் (5), தேனி மண்டலம் (6), தூத்துக்குடி மண்டலம் (15), திருச்சிராப்பள்ளி மண்டலம் (3), திருவாரூர் மண்டலம் (1) ஆக மொத்தம் 30 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் வாடிக்கையாளர் பயன்பாட்டிற்காக பாதுகாப்புப் பெட்டகங்கள் அமைக்கவும், அவற்றில் 12 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் சங்கத்தின் சொந்த நிதியைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி

வேண்டியும், 18 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் பராமரிக்கும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து கடன் வழங்குமாறு கோரியும் மண்டல இணைப்பதிவாளர்களிடமிருந்து கருத்துருக்கள் வரப் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்த ஏதுவாக 12 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் தத்தமது சொந்த நிதியைக் கொண்டும், 18 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் பராமரிக்கும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து கடனாக பெற்றும் பாதுகாப்பு பெட்டகங்கள் அமைக்க உரிய அரசாணை பெற்றுத் தருமாறு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்கூறிய சூழ்நிலையில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்த ஏதுவாக இணைப்பில் கண்டுள்ள 30 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில், 12 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் தத்தமது சொந்த நிதியைக் கொண்டும், 18 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் பராமரிக்கும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து கடனாக பெற்றும் வாடிக்கையாளர் பயன்பாட்டிற்காக பாதுகாப்பு பெட்டகங்கள் அமைக்க அனுமதி வழங்கி ஆணைகள் வெளியிடலாம் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம்.பி. நிர்மலா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை – 10.
மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஜி) துறை,
இகோ/ உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

## இணைப்பு

## கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஎன்1) துறை

**அரசாணை (நிலை) எண் :98 நாள். 23.09.2014**

| 30 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் வாடிக்கையாளர் பயன்பாட்டிற்காக பாதுகாப்பு பெட்டகங்கள் அமைப்பது தொடர்பான கருத்துருக்களின் விவரம். | | | | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | மண்டலம் | சங்கத்தின் பெயர் | திட்ட மதிப்பீட்டு தொகை (ரூ) | சொந்த நிதி | கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி |
| 1. | நாமக்கல் (5) | பொத்தனூர் தொ.வே.கூ.க.சங்கம். | 2,33,928 | சொந்த நிதி | – |
| | | தோக்கவாடி தொ.வே.கூ.க.சங்கம் | 2,33,928 | சொந்த நிதி | – |
| | | மாவுரெட்டிப்பட்டி தொ.வே.கூ.க.சங்கம் | 2,33,928 | சொந்த நிதி | – |
| | | கூத்தம்பூண்டி தொ.வே.கூ.க.சங்கம் | 2,33,928 | சொந்த நிதி | – |
| | | மொளசி தொ.வே.கூ.க.சங்கம் | 2,33,928 | சொந்த நிதி | – |
| 2. | தேனி (6) | நாகலாபுரம் தொ.வே.கூ.க.சங்கம் | 1,91,772 | சொந்த நிதி | – |
| | | கொடுவிலார்பட்டி தொ.வே.கூ.க.சங்கம் | 1,91,772 | சொந்த நிதி | – |
| | | வெங்கிடாசலபுரம் தொ.வே.கூ.க.சங்கம் | 1,91,772 | – | கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி |
| | | வீரபாண்டி தொ.வே.கூ.க.சங்கம் | 1,91,772 | – | கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி |
| | | லெட்சுமிபுரம் தொ.வே.கூ.க.சங்கம் | 1,91,772 | சொந்த நிதி | – |
| | | சில்லமரத்துப்பட்டி தொ.வே.கூ.க.சங்கம் | 1,91,772 | – | கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி |
| 3. | தூத்துகுடி ( 15) | கடலையூர் தொ.வே.கூ.க.சங்கம் | 2,33,928 | – | கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி |
| | | வில்லிசேரி தொ.வே.கூ.க.சங்கம் | 2,33,928 | – | கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | திட்டங்குளம் தொ.வே.கூ.க.சங்கம் | 2,33,928 | – | கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி |
| | | | நாலாட்டின்புத்தூர் தொ.வே.கூ.க.சங்கம் | 2,33,928 | – | கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி |
| | | | கே.மணியாச்சி தொ.வே.கூ.க.சங்கம் | 2,33,928 | – | கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி |
| | | | குரும்பூர் தொ.வே.கூ.க.சங்கம் | 2,33,928 | – | கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி |
| | | | சாத்தான்குளம் தொ.வே.கூ.க.சங்கம் | 2,33,928 | சொந்த நிதி | – |
| | | | மாதவன்குறிச்சி தொ.வே.கூ.க.சங்கம் | 2,33,928 | – | கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி |
| | | | அம்பலசேரி தொ.வே.கூ.க.சங்கம் | 2,33,928 | – | கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி |
| | | | பழங்குளம் தொ.வே.கூ.க.சங்கம் | 2,33,928 | – | கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி |
| | | | வெள்ளாளன் விளை தொ.வே.கூ.க.சங்கம் | 2,33,928 | – | கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி |
| | | | ஆறுமுகநேரி தொ.வே.கூ.க.சங்கம் | 2,33,928 | – | கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி |
| | | | சொக்கன் குடியிருப்பு தொ.வே.கூ.க.சங்கம் | 2,33,928 | – | கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி |
| | | | தென்திருப்பேரை தொ.வே.கூ.க.சங்கம் | 2,33,928 | – | கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி |
| | | | அரசூர் தொ.வே.கூ.க.சங்கம் | 2,33,928 | – | கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி |
| 4 | திருச்சிராப்பள்ளி (3) | | உய்ய கொண்டான் திருமலை தொ.வே.கூ.க.சங்கம் | 2,59,920 | சொந்த நிதி | – |
| | | | புங்கனூர் தொ.வே.கூ.க.சங்கம் | 2,59,920 | சொந்த நிதி | – |
| | | | சோமரசம்பேட்டை தொ.வே.கூ.க.சங்கம் | 2,59,920 | சொந்த நிதி | |
| 5. | திருவாரூர் (1) | | லெட்சுமாங்குடி தொ.வே.கூ.க.சங்கம் | 2,59,920 | – | கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி |
| | மொத்தம் | | 30 தொ.வே.கூ.க. சங்கங்கள் | 68,68,872 | | |

எம்.பி. நிர்மலா
அரசு முதன்மைச் செயலாளர்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்